## மத்திய சுற்றாடல் அதிகாரசபை - 2019

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, அதிகாரசபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

-----------------------------------------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிலையம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

--------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக அதிகாரசபையின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக அதிகாரசபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பிணிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது அதிகாரசபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது அதிகாரசபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதாஎனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

---

### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

---

கொடுக்கல் வாங்கல் முகாமைத்துவத்தினை பொதுவான மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல் தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்களிதன்மையினைப் பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் விசேடத்துவமான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மையினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது ஒப்பீடு செய்தல் மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு போதியளவான ‘‘சிறப்பாகத் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிறுவனத்தினால் பேணுதல் அத்தியாவசியமானதாகும்.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 25 ஆம் பந்தியின் பிரகாரம் ஏதேனும் சொத்தென்று கையேற்கப்படும் போது கையேற்கப்பட்ட திகதியில் காணப்படுகின்ற பெறுமதிக்கு கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அமைச்சினால் அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்த ஆதனங்கள் உபகரண உருப்படிகள் 20 கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | சொத்துக்களின் நியாயமான பெறுமதி கணக்கீடு செய்யப் பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02 இன் பிரகாரம் காசுப் பாய்ச்சலை தயாரிக்கும் போது காசாக இடம்பெறும் கொடுக்கல் வாங்கல்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதும் அதிகாரசபையின் காசுப் பாய்ச்சலுக்கு தாக்கமொன்று ஏற்படுத்தாத வேறு நிறுவனமொன்றினால் கையளிக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் முன்னைய ஆண்டு களுக்குரிய ரூபா 4,720,384 தொகை முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் நிதி வெளிப்பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டில் இதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் பொருண்மையான முன்னைய காலப்பகுதிகளின் தவறுகள் அவை கண்டு பிடிக்கப்பட்டதன் பின்னர் வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் முன்னெச்சரிக்கையாக சீராக்கி ஒப்பிடப்பட்ட பெறுமதிகள் இணக்கம் செய்யப்பட்டு அத்தவறுகளின் தன்மை மற்றும் சீராக்கப்பட்ட முறை தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வண்டிய போதிலும் முன்னைய ஆண்டிற்குரிய மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 76,976,507 ஆன பிழைகளை திருத்தியமை தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் மேவுகை செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் தவறுகள் திருத்தம் செய்யப்பட்டு அது மீண்டும் இணக்கம் செய்யப்பட்டிருக்கையில் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தவறுதலாக உரிய இலக்கங்கள் 2019 ஆம் ஆண்டில் பெறுவனவாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாக | - மேற்படி - |

**1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2012-2016 ஆம் ஆண்டுகளில் அதிகார சபைக்கு கையளிக்கப்பட்ட ரூபா 3.5 மில்லியன் கூட்டுப்பெறுமதியான 02 வாகனங்கள் முன்னெச்சரிக்கையாக சீராக்கி நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு | இது தொடர்பாக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பதிலாக மீளாய்வாண்டில் மேற்கொள்ளப் பட்ட கையேற்பாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் மூலம் சுற்றாடல் வாயு மாசடைதலைப் பரீட்சிப்பதற்கு அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 4,642,740 பெறுமதியான நடமாடும் ஆய்வுகூடம் சொத்தொன்றாக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக எதிர்வரும் நடவடிக்கைகள் அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. | நடைமுறைச் சொத்துக்கள் தனமையான கொடுக்கல் வாங்கலாக இருப்பதால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | நிலுவை கட்டிட வாடகையாக அதிகாரசபைக்கு கொடுப்பனவிற்குள்ள ரூபா 11,790,000 ஆன பொறுப்புகளுக்காக நிதிஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | பாராளுமன்ற முன்மொழிவொன்றை நிறைவேற்றுவதன் மூலம் இச்சிக்கலுக்கு தீர்வு காண்பதற்கு சட்டமா அதிபரால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.5.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2019 நவம்பர் 13 ஆந் திகதிய 438 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | கைதவிர்க்கப்பட வேண்டிய பொருட்கள் மற்றும் சொத்துக்கள் குறித்துரைக்கப்பட்டதன் பிரகாரம் கைதவிர்க்கப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையின் வாகன நிறுத்துமிடத்தில் குவித்து வைக்கப்பட்டுள்ள கைதவிர்க்கப்பட வேண்டிய பொருட்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடனடியாக கைதவிர்ப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட உள்ளன. | சுற்றறிக்கை ஏறபாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2019 யூன் 19 ஆந் திகதிய 04/2019 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கை | உடன்படிக்கை செய்யப்பட்ட சேவைகள் தொடர்பாக முறையான செலவின கட்டுப்பாட்டு முறைமைகளை பயன்படுத்தி மற்றும் சேவை பயன்பாடு தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுத்தும் செலவினங்களை கட்டுப்படுத்துவதற்காக வசதிகளை மேற்கொள்ள வேண்டிய போதிலும் வாடகை வாகனங்களை பெற்றுக் கொள்வது தொடர்பாக அதிகாரசபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்க வில்லை. | வாடகை போக்குவரத்து வசதிகள் பெற்றுக் கொள்வதற்காக மீண்டும் கேள்வி கோரல் மேற்கொள்ள வேண்டியுள்ளது. | - மேற்படி - |
| (இ) | 1997 பெப்ரவரி 03 ஆந் திகதிய 06/97 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | பதில் கடமை புரியும் காலம் கூடியது 03 மாதங்களுக்கு உட்பட்டு இருக்க வேண்டிய போதிலும் அக்காலப்பகுதியில் குறித்த வெற்றிடம் நிரப்பப்படாவிட்டால் அப்பதவியை மேலும் வைத்திருக்க வேண்டிய தேவை இருந்தால் உரிய அமைச்சின் செயலாளரால் விசாரணை செய்யப்பட வேண்டுமென குறிப்பிடப் பட்டிருந்தும் அதற்கு புறம்பாக அதிகாரசபையால் தொடர்ந்தும் பதில் கடமை புரிவதற்காக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். | தற்போது ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்காக எடுக்க வேண்டிய செயற்பாடுகளின் இறுதிக் கட்டத்தில் உள்ளது | - மேற்படி - |
| (ஈ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப பிரமாணம் 102 மற்றும் 105 | நடமாடும் வாயு தர ஆய்வுகூடம் விபத்திற்கு உட்பட்டிருந்த போதும் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை | இவ்வாகனம் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்படுகின்றதா என்பது தொடர்பாக புலனாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (உ) | 1988 இன் 56 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம் | i. | கழிவுகள், தயாரிக்க முடியாத மலம் மற்றும் விஷ இரசாயன பொருட்களை வெளியேற்றுவதை தவிர்த்தல். | சுற்றாடல் அனுமதிப்பத்திர மார்க்கம் ஊடாக ஒழுங்குபடுத்தப்படுவதாக | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| | | ii | கழிவுப் முகாமைத்துவத்தினூடாக உருவாகும் உப விளைவொன்றான கொம்போஸ்ட் உர உற்பத்தி மூலம் இரசாயன பசளைப் பயன்பாட்டை குறைப்பது தொடர்பாக முன்னுரிமை வழங்குதல். | சகல நிறுவனங்களுக்கும் நிதி மற்றும் தொழில்நுட்ப ஆலோசணை வழங்கப்பட்டுள்ளதாக | - மேற்படி - |
| | | iii | நகர கழிவுப் பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தலும் ஒழுங்குபடுத்தலும். | பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளதாகவும் | - மேற்படி - |
| | | iv | பொது போக்குவரத்து முறைமைகள் செயற்படுத்தும் போது ஏற்படும் சுற்றாடல் தாக்கத்தை ஒழுங்குபடுத்தல். | இது தொடர்பாக வர்த்தமானி அறிவித்தல் வெளியடப்பட்டுள்ள தாகவும் | - மேற்படி - |
| | | v | பின்பாவனை பிளாஸ்ரிக் கழிவுப்பொருள் முகாமைத்துவ தேசிய செயற்திட்டத்தை செயற்படுத்துதல். | இது தொடர்பாக எதிர்வரும் நடவடிக்கைகளுக்காக அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது | - மேற்படி - |
| | | vi | இலங்கையில் காணப்படும் சுற்றாடல் நிலைமை தொடர்பாக ஆய்வுசெய்தல் மற்றும் பின்தொடர் | பாராளுமன்ற முன்மொழிவொன்றை நிறைவேற்றுவதன் | - மேற்படி - |

| | |
|---|---|
| நடவடிக்கை மற்றும் அது தொடர்பாக தேவையான சட்டங்களை தயாரித்தல், தேசிய சுற்றாடல் கொள்கை மற்றும் தந்திரோபா யங்கள் தொடர்பாக பாதுகாத்தல் மற்றும் முகாமைத்துவம் செய்வது தொடர்பாக பெறுகை மற்றும் வேறு ஏதேனும் விடயங்கள் தொடர்பாக பரிந்து ரைத்தல், சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பாக அதிகார சபைக்கு அனுமதிப்பத்திரம் வழங்குதல் போன்ற செயற்பாடுகள் வடமேல் மாகாணத்தில் செயற்படுத்துதுல் | மூலம் இச்சிக்கலுக்கு தீர்வு காண்பதற்கு சட்டமா அதிபரால் ஆலோசணை வழங்கப்பட்டுள்ள தாகவும் |

## 2. நிதி மீளாய்வு

-------------------------

### 2.1 நிதி விளைவுகள்

-----------------------------

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 71,973,628 ஆன மிகையொன்றாக இருந்ததுடன் அதனேடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 44,508,000 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 116,517,271 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு பிற்போடப்பட்ட வருமானம் ரூபா 24,947,737 ஆல் குறைவடைந்தமை, ஆளணிக்கான படிகள் ரூபா 125,578,93 ஆலும் பிரயாணச் செலவினம் ரூபா 20,214,529 ஆலும் அதிகரித்திருந்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நாளாந்தம் உக்கும் கழிவுகள் சேதனப்பசளையாக மாற்றுவதற்காக ரூபா 87,492,401 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த பெதியாகந்த கொம்போஸ்ட் பிரிவு 02 ஆண்டுகள் கடந்திருந்த போதும் இதுவரை பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்க வில்லை | சகல தேவைப்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் செயற்திட்டத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | துரிதமாக பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளக் செயற்படுத்தப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2017 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த தேசிய சுற்றாடல் சட்டத்தை திருத்தம் செய்யும் நடவடிக்கைகள் இதுவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | தேவையான பின்தொடர் நடவடிக்கைககள் எடுப்பதற்கு உள்ளதாகவும் | சட்டத்தை நிறைவேற்றுவதை துரிதப்படுத்துதல் வேண்டும் |
| (ஆ) மத்திய மாகாண அலுவலகத்தின் சுற்றாடல் அனுமதிப்பத்திர தரவு முறைமையை முறையாகவும் காலரீதியிலும் நாளதுவரை யாக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையான ஆலோசணைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் | முறையாகவும் காலரீதியிலும் நாளது வரையாக்கப்பட வேண்டும். |
| (இ) வட மத்திய மாகாண அலுவலகத்தினால் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களை வழங்கும் போது தேவையான | சரிசெய்வதற்காக உத்தியோகத்தர்களுக்கு ஆலோசணை | பின்தொடர் நடவடிக்கை செயற்பாடுகள் தொடர்பாக கவனம் |

| | | | |
|---|---|---|---|
| | தொழில்நுட்ப அறிக்கை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்காமை மற்றும் கைத்தொழிலாளர் களிடமிருந்து கேட்கப்பட்ட நீர் தர அறிக்கை சமர்ப்பிக்கப்படாமை தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | வழங்கப்பட்டுள்ளதாக | செலுத்தப்பட வேண்டும். |
| (உ) | வட மாகாணத்தினுள் தேசிய சுற்றாடல் சட்டத்தை செயற்படுத்தும் போது வடமேல் மாகாண சுற்றாடல் சட்டத்துடன் உருவாகும் சிக்கலான நிலைமையினால் வடமேல் மாகாணத்திற்கு இணைக்கப் பட்டிருந்த பதவியணி வடமேல் மாகாணத்தின் வெளிவாரி நிறுவனங்களுடன் கடமைகளில் ஈடுபடும் போது சிக்கலான நிலைமையொன்று உருவாகியிருந்தது. | தேவையான தொடர் நடவடிக்கைகள் எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரகாரம் அனைத்து மாகாணங்களும் செயற்பட வேண்டும். |

### 3.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 07 பழைய மோட்டார் வாகனங்களை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் கடல் நீருக்கு அகப்பட்டதால் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட மோட்டார் வண்டியொன்று 07 ஆண்டு காலமாக விளைவற்றுக் காணப்பட்டது. | நிதிப்பிரமாணம் 104 பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும் | துரிதமாக கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளின் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் 33,536,000 ஆன ஐக்கிய அமெரிக்க டொலரிலான பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்தின் கொரியா கடன் உதவியின் கீழ் செயற்படும் திண்மக் கழிவுப்பொருள் அகற்றும் வசதிகளை நிர்மாணிக்கும் செயற்திட்டம் 2015 ஜூன் 29 திகதி பூர்த்தி செய்வதற்கு திட்டமிட்டிருந்த போதிலும், 2020 மே வரையிலும் செயற்திட்டத்தின் திட்டமிடல் கட்டத்தின் அலுவல்கள் மாத்திரம் பூர்த்தி செய்திருந்தது. ஆதலால் செயற்திட்டத்தின் காலப்பகுதி 2021 வரை நீடிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே இச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 5½ ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் 04 நில நிரப்புதல்கள் இதுவரை ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. | செயற்திட்டத்தின் மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு அமைச்சரவை நியமித்த நிலையான பெறுகை குழுவின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அத்தீர்மானத்தின் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளது | கடன் உதவி அடிப்படையில் செயற்திட்டம் செயற்படுவதால் செயற்திட்ட வேலைகள் துரிதமாக ஆரம்பிக்கப்பட வேண்டும். |

## 3.5 ஏனைய அமைப்புகளின் வளங்களை பயன்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நகர அபிவிருத்தி அதிகார சபைக்குரிய 109.88 பேர்ச் அளவிலான காணியொன்று அனுமதி இல்லாமலும் இணைக்கப் பாடொன்றில்லாமலும் அதிகார சபையால் பயன்படுத்தப்பட்டிருந்தன. | காணியின் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | அனுமதி மற்றும் இணக்கப்பாடு என்பவற்றை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வருடாந்தம் 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்ட போதும் அக்குழுவில் போது எடுக்கப்பட்ட தீர்மானங்களை செயற்படுத்துவது மந்தகெதியில் காணப்பட்டது. | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. | கணக்காய்வு குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானங்களை துரிதமாக செயற்படுத்த வேண்டும் |